**செய்தி வெளியீடு எண் : 157** **நாள்: 22.01.2022**

**செய்தி வெளியீடு**

22.1.2022 இன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்களால் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கீழ் தனியார் பிரவுசிங் சென்டர்கள் மூலம் இ–சேவை மையங்கள் தொடங்குவதற்கான ஆணைகள் 36 நபர்களுக்கு வழங்கப்பட்டன. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் 2457 இ–சேவை மையங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு குறைந்த கட்டணத்தில் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது வழங்கப்படும் புதிய இ–சேவை மையங்கள் அரசின் சேவைகளைப் பொதுமக்கள் எளிதில் பெறுவதற்கும் இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்பை உருவாக்குவதிலும் பெறும் பயனளிக்கும். இந்நிகழ்வில், தகவல் தொழில் நுட்பவியல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், திரு.நீரஜ் மித்தல், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர்.வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**